மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான வசதிகளை தமிழக அரசு செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்விகேட்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

விரைவில் வளரும் மரங்களை நடுவதற்கான திட்டம்.

*வினா எண் 144—திரு. ஏ. சி. சண்முகம்: திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-77 வரவு செலவுத்திட்டத்தில் விரைவில் வளரும் மரங்களை நடுவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் கைவிடப்பட்டது என்று கூறுவது சரியல்ல. விரைவில் வளரும் மரங்களை நடுதல் என்ற திட்டத்தின் பெயர் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ''மரக்கூழ் உற்பத்தித் தோட்டங்களுக்கான திட்டம்'' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1976-77-இல் மரக்கூழ் உற்பத்தித் தோட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 25.08 இலட்சத்தில் ரூ. 21.97 லட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படக் கூடிய வகையில் கடந்த ஆண்டு, இந்த ஆண்டு, எதிர் வருகிற நிதியாண்டில் அதிகத் தொகை ஒதுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 1977-78-ல் ரூ. 31.38 லட்சம்; 1978-79-ல் ரூ. 27.76 லட்சம்; 1979-80-ல் ரூ. 26.31 லட்சம்; 1980-81-ல் ரூ. 30.84 லட்சம்; 1981-82-ல் ரூ. 36.03 லட்சம்; 1982-83-ல் கூட ரூ. 43.76 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் நடுகிற காலத்தில் காடுகளானாலும் சரி, சாலை ஓரங்கள் ஆனாலும் சரி, பின்னால் பலன் தரக்கூடிய புளிய மரங்களைப் போன்ற மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரம் நடுகிற திட்டத்திலே பல்வேறு தலைப்பின் கீழ் நடுகிறார்கள். இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி விரைவிலே வளர்கிற மரங்களை நடுகிற திட்டத்தைப் பற்றியாகும். அதைத்தான் மரக்கூழ் தயாரிக்கிற தோட்டங்களுக்கான திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். பல்வேறு திட்டங்களில் வருகிறபோது நீண்டகாலம் பலன் தரக்கூடிய புளியமரமும் வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிராமப்புறங்களில் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அரசு அவைகளை கையகப்படுத்தி மரங்களை வளர்க்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலங்களில் எல்லாம் மரங்கள் வளர்க்கிற திட்டம் தான் சமுதாய காடு வளர்க்கிற திட்டம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இது வரையில் எத்தனை கோடி கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் கன்றுகளை நட்டு வருகிறோம். இன்னொரு பக்கம் மரங்களை வெட்டிச் செல்கிற நிலைமை இருக்கிறதே, இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தனியாக ஒரு கேள்வி கேட்கப்பட்டால் விவரமாகப் பதில் தர முடியும்.

கல்லணையில் சுற்றுலா தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

***வினா எண். 145.**—**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கல்லணையில் கட்டப்படவிருக்கும் சுற்றுலா தங்கும் விடுதியின் தொடக்கப்பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) இத் திட்டத்திற்கு அரசின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) கல்லணை மாவட்ட உலாத்தலமாக மேம்படுத்தப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அங்கே ரூ. 1.54 இலட்சத்தில் உணவுக்